# அரசு பொது செய்முறைத்தேர்வு - பிப்ரவரி 2020
# பன்னிரெண்டாம் வகுப்பு

*நேரம் : 2.30 மணி* **மனையியல்**

*(புதிய பாடத்திட்டம் மற்றும் புதிய முறை கேள்வித்தாள்) மதிப்பெண் : 15*

*பதிவேடு : 05*

*மொத்த மதிப்பெண் : 20*

**குறிப்பு : ஒவ்வொரு batch ற்கும் இரண்டு வினாக்களின் ஒரு தொகுப்பு தரப்பட வேண்டும்.**

**குறிப்பு : (பகுதி - அ) உள்ள 5 வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்கவும். ஒவ்வொரு வினாவிற்கும் ஒரு மதிப்பெண்.**

**குறிப்பு : பகுதி -ஆ ல் ஒரு வினாவிற்கு பத்து மதிப்பெண்.**

**பகுதி - அ**

**I.** 1. ***கண்டறிதல் :***

அ) கொடுக்கப்பட்டுள்ள மலர் அலங்காரத்தின் வகையைக் கண்டறிக.

ஆ) கொடுக்கப்பட்டுள்ள உணவுப் பொருளில் உள்ள முத்தரையைக் கண்டறிந்து அதனைப் பற்றி எழுதுக.

இ) கொடுக்கப்பட்டுள்ள முன்பள்ளியில் பயன்படுத்தும் கற்பிக்கும் சாதனத்தை கண்டறிந்து விளக்குக.

ஈ) கொடுக்கப்பட்டுள்ள படத்தில் உள்ள பிராங் வண்ணச்சக்கரத்தின் நிறப்பொருத்தங்களை கண்டறிந்து எழுதுக.

உ) கொடுக்கப்பட்டுள்ள மருத்து தாவரத்தை கண்டறிந்து அதன் பயன்களை எழுதுக.

**பகுதி - ஆ (1×10=10)**

**II.** 1. நீரிழிவு நோயாளிக்கு சிறுதானியங்களைப் பயன்படுத்தி உணவுத் திட்டத்தினை எழுதி ஏதேனும் ஒரு உணவினை தயார் செய்க.

2. வயிற்றுப் புண் உள்ளவர்களுக்கான ஒரு நாளைய உணவுத்திட்டத்தினை எழுதி ஏதேனும் ஒரு உணவினை தயார் செய்க.

3. நீ தயாரிக்கும் ஊறுகாய்க்கு குறிப்பு தாள் ஒன்று தயார் செய்க.

4. கீழே கொடுக்கப்பட்டுள்ள உணவுப் பொருட்களில் கலப்படப் பொருள் உள்ளதா என கண்டறிந்து கலப்படப் பொருளின் பெயர் மற்றும் அதைக் கண்டறியும் எளிய சோதனை முறைகளை எழுதுக.

   அ) பால் ஆ) தேன் இ) சர்க்கரை ஈ) மிளகாய்தூள் உ) நல்ல மிளகு

5. துணியைக் கட்டி சாயமிடும் செயல்முறையை விளக்குக. கொடுக்கப்பட்டுள்ள துணியை இம்முறை மூலம் சாயமிடுக.

6. நீ இருக்கும் பகுதியில் உள்ள மலர்களை வைத்து மலர் அலங்காரம் ஒன்று செய்க.

7. பிராங் வண்ணச் சக்கரத்தை வரைந்து ரங்கோலியில் உள்ள நிறப்பொருத்தங்களை அறிந்து முதன்மை, இரண்டாம் மற்றும் மூன்றாம் வகை நிறங்களைப் பற்றி விளக்குக.

8. முன்பள்ளி மாணவனுக்கு விளையாட்டு பொம்மை ஒன்று தயார் செய்க.

9. பாரம்பரிய இனிப்பு மற்றும் கார வகை சிற்றுண்டி ஒன்று தயார் செய்க.

10. சளி, ஜலதோஷத்தை போக்க இரண்டு மருத்துவ குணங்கள் உடைய தாவரத்தை பயன்படுத்தி இரண்டு உணவைத் தயார் செய்க.

---------